**சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.1 , ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 03/2020

நாள்: 26.03.2026

வா.சா. 2 – ராஜீவ்காந்தி

2026–ம் ஆண்டு மார்ச் 26–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.வீராசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் வாதியின் அப்பா கோவிந்த படையாட்சி எப்போது இறந்தார் என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். கோவிந்த படையாட்சிக்கு 3ம் தாரத்து மனைவியின் மூலம் பிறந்தவர் தான் 1ம் வாதி. கோவிந்த படையாட்சியின் இறப்புக்கு பின்னிட்டு அவரது வாரிசுகள் பற்றிய வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 1ம் வாதி இறந்துவிட்டார். 1ம் வாதியின் இறப்புக்கு பின்னிட்டு அவரது வாரிசுகள் பற்றிய வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.1ம் வாதியின் முதல் மனைவி பார்வதி என்றால் சரிதான். பார்வதி என்பவர் முத்துசாமி படையாட்சியின் மகள் என்றால் சரிதான். 1ம் வாதிக்கு 3ம் தாரத்து மனைவி பெயர் காந்தி. காந்தி என்பவர் முத்துசாமி படையாட்சியின் பேத்தி ஆவார். எனது தாயார் காந்திக்கும் 1ம் வாதிக்கும் எந்த தேதியில் எங்கு திருமணம் நடைபெற்றது என்பது குறித்த ஆதரவு ஏதும் உள்ளதா என்றால் 1983 டிசம்பர் மாதம் அரியலூர் பெருமாள் கோவிலில் திருமணம் நடைபெற்றதாக 1ம் வாதி குறிப்பு வாங்கி வைத்துள்ளார். மேற்படி குறிப்பு உள்ள நோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருமணம் பத்திரிக்கை மற்றும் மேற்படி திருமணத்திற்காக கோவிலில் வழங்கப்படும்

இரசீது உள்ளதா என்றால் இல்லை. என் அப்பா 1ம் வாதிக்கு தான் தெரியும். 6ம் வாதிக்கு தற்போது 65 வயது ஆகிறது என்றால் இருக்கலாம். 5ம் பிரதிவாதிக்கு தற்போது 29 வயது இருக்கும். அசல் வழக்கு எண்.52/1987 மற்றும் 117/1991 ஆகிய இரு வழக்கின் விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். மேற்படி வழக்குகள் பற்றிய ஆதரவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.52/1987–ன் உயில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் வாதி 1986–ல் ஒரு உயில் எழுதி வைத்துள்ளது தெரியுமா என்றால் அப்படி ஒரு உயிலே இல்லை.

**1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.